திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: எந்தவொரு நாட்டிலும் சிறுதொழில் வளர்ச்சியடைந்தால்தான் பொருளாதாரம், வேலைவாய்ப்பு, தனிநபர் வருமானம், வாங்கும் திறன் ஆகியவை அதிகரிக்கும். அந்த...

6. தகவல் கோரல்

உறுப்பினர்கள் உரையாற்றுகையில் கடைட்பிடிக்கவேண்டிய மரபு

திரு. ம. அப்துல் லத்தீப்: ஒரு நிமிடம். தலைவர் அவர்களே, இந்த அவையில் இடம் பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் புதிதாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அவையினுடைய மரபு கொஞ்ச காலத்தில்தான் தெரியும். எதற்கும் பயிற்சியும் நேரமும் தேவை. தங்களைத் தவிர வேறு யாரையும் விளித்துப் பேசக் கூடாது. அதைத்தான் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். பேரவைத் தலைவரைத்தவிர வேறு யாரையும் விளித்துப் பேசக் கூடாது. இப்போது அண்மைக் காலத்தில் தங்களைத் தவிர்த்து வேறு சிலரை, வேறு யாராக இருந்தாலும்-யாரையும் குறிப்பிட்டுப் பேசலாம், பேச்சில் அவர்களுடைய பெயர்கள் இடம் பெறலாம், அது தவறில்லை. ஆனால், தங்களைத்தவிர-வேறு யாரையும் விளித்துப் பேசக் கூடாது. அதிலே பல சிக்கல்கள் உருவாகும். எனவே, தங்களைத்தான் விளித்துப் பேசவேண்டும் என்பது அவையினுடைய மரபு. அது காலங்காலமாகக் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. இடைமறித்து நாங்கள் பேச முடியாது. நீங்கள்தான் அதைத் திருத்துவதற்கு உரிமை படைத்தவர்கள். எனவே, அவை உறுப்பினர்களே என்றெல்லாம் எங்களையும் விளித்துப் பேசக்கூடாது. எனவே, அதைத் தாங்கள்தான் திருத்தமுடியும். அவை உறுப்பினர்கள் பலர் புதிதாக வந்திருக்கிறார்கள். எனவே, அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய பொறுப்பு உங்களுடையது.

இரண்டாவது, வாதப் பிரதிவாதங்கள் சூடாகவும் நடக்கலாம்; சுவையாகவும் நடக்கலாம். ஆனால், ஏகாரத்தில் ஒருவரை ஒருவர் வார்த்தைகளால் பரிமாறிக்கொள்வது என்பது தடுக்கப்பட வேண்டும். வாடா, போடா, அது யார் சொன்னதாக இருந்தாலும், நான் சொன்னதாக இருந்தாலும், அதற்கு ஏதாவது ஒரு வரையறை வேண்டும். தயவுசெய்து அந்த வார்த்தை இனிமேல் அவையில்-தங்களுடைய தலைமையில் நடக்கும் இந்த அவையில், அந்த வார்த்தை-பயன்படுத்தப்படுவதை எக்காலத்திலும் அனுமதிக்க முடியாது என்பதைத் தாங்கள் மிகத்

2001 ஆகஸ்ட் 31] [திரு. ம. அப்துல் லத்தீப்]

தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அதையும் மீறி வாடா, போடா, என்று-நான் சொன்னதையும் நீங்கள் சபைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டும். யாராவது பயன்படுத்தினால் தயவுசெய்து அதை அனுமதிக்க முடியாது, அதையும் மீறிப் பயன்படுத்தினால் நடவடிக்கை எடுப்போம்-என்பதைத் தாங்கள் தயவுசெய்து தெளிவாகச் சொல்ல வேண்டும். அவையினுடைய கண்ணியத்தைக் காக்க வேண்டும். புதிய உறுப்பினர்களுக்கு அவையினுடைய மரபுகளை நாம் தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இதைச் சொல்கிறேனேதவிர, வேறு அல்ல. நான் யாரையும் குறிப்பிட்டும் சொல்லவில்லை; குற்றமும் சொல்லவில்லை. தயவுசெய்து அவை மரபைக் காக்க தாங்கள் உரிய முறையில் உறுப்பினர்களுக்கு அறிவுரை கூற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தை நான் சொன்ன கருத்தாகவே அவையினர் எடுத்துக் கொள்ளலாம். அவைக்கு வந்திருக்கக்கூடிய புதிய உறுப்பினர்களுக்கு அந்த மரபுகள் தெரியாமல் இருக்கலாம். ஆகவே, அந்த மரபுகளை எல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வழிகாட்டிகளாக நம்முடைய துரைமுருகனைப் போன்றவர்கள், பொன்முடியைப் போன்றவர்கள், பரிதி இளம்வழுதியைப் போன்றவர்கள்-அவர்கள் எல்லாம் மூத்த உறுப்பினர்கள். ஆகவே, அந்த உறுப்பினர்கள் எல்லாம்-மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: இன்றைக்கு ஒரு நல்ல முயற்சியிலே....

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மாதிரியான instruction.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிச்சயமாக இல்லை. ஒரு நட்பு ரீதியாகத்தான் நான் சொல்கிறேனேதவிர, தவறாகச் சொல்லவில்லை. புதிய உறுப்பினர்களுக்கு, துரைமுருகனைப் போன்ற, பரிதி இளம்வழுதியைப் போன்ற, பொன்முடியைப் போன்ற, மூத்த உறுப்பினர்கள், அமைச்சர் பொறுப்பிலே இருந்த பெருமக்கள் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும்

என்றுதான் நான் சொல்கிறேனே தவிர, இதை நான் ஒன்றும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நீங்கள் அப்படி நடந்து கொள்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இப்படிச் சொல்லியிருக்கலாம். புதிதாக வந்த மாண்புமிகு உறுப்பினர்கள், துரைமுருகனைப் போல், பொன்முடியைப் போல் நடந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்போல், நடந்துகொள்ள வேண்டிய அளவிற்கு நீங்களும் நடந்துகொள்ள வேண்டும். *(சிரிப்பு)*

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதோடு விட்டுவிடுங்கள்.

4. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும் – *தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 26 – கதர் கிராமத் தொழில்கள்

(ஆ) கோரிக்கை எண் 47 – ஊரகத் தொழில்கள்

(இ) கோரிக்கை எண் 59 – ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

(ஈ) கோரிக்கை எண் 24 – தொழில்கள்

(உ) கோரிக்கை எண் 53 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)